# கழகத் தலைவர் அவர்களுடன் – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு!













கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (5.5.2026), காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளான ம.தி.மு.க. – வி.சி.க. சி.பி.எம். சி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தே.மு.தி.க. கட்சிப் பொருளாளர், வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 'ஆம்ஆத்மி' கட்சியின் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கினார். உடன் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச்செல்வன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர், பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் கே.நித்தியானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முனைவர் கோவி. செழியன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட கா. அண்ணாதுரை வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.